DEPOSITION OF WITNESS Crl.Misc.39
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE SPECIAL COURT OF SESSIONS JUDGE, NAMAKKAL.

Special Court for SC/ST Cases, Namakkal.

Sessions Case No.71/2016

Deposition of Witness for PW.1.

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. ராணி |
| Father / Husband Name | : | கந்தசாமி |
| Village | : | சர்க்கார் மாமுண்டி (சமுத்துவபுரம்) காலனி |
| Taluk | : | நாமக்கல் |
| Caste | : | ஆதி திராவிடர் |
| Calling | : | கூலி |
| Religion | : | இந்து |
| Age | : | 37 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 29.08.2019.

முதல் விசாரணை -

நான் திருச்செங்கோடு சர்க்கார் மாமுண்டி சமத்துவபுரம், புதுக் காலனியில் குடியிருந்து வருகின்றேன். நான் கூலி வேலை செய்து வருகின்றேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். அவர் என் வீட்டிற்கு எதிர்த்தாற்போல் உள்ள வீட்டில் வாடகைக்கு குடியிருந்து வந்தார். நான் பட்டியல் வகுப்பைச் சேர்ந்த இந்து பறையர் சாதியை சேர்ந்தவள். ஆஜர் எதிரி வன்னியர் சாதியை சேர்ந்தவர். மல்லசமுத்திரம் காவல் நிலையத்தில் எங்கள் வீட்டு கோழிகள் இறந்துபோனது சம்பந்தமாக புகார் கொடுக்க சென்றிருந்தோம். அந்த புகார் எதிரி கோவிந்தன் மீது கொடுத்திருந்தோம். வீட்டிற்கு

வருவதற்குள் ஆஜர் எதிரி எங்கள் வீட்டிற்கு முன்பு வந்து என் மீது புகார் கொடுக்கிறாயா பற கண்டாரோளி, பற தேவிடியா என்று திட்டி உன்னை என்ன செய்கிறேன் பார் என்று சொல்லிவிட்டு சென்றுள்ளார். நான் வந்ததும் நடந்தை அங்கிருந்தவர்கள் சொன்னார்கள். 2014 ம் ஆண்டு ஜனவரி மாதம், தேதி ஞாபகமில்லை. அந்த நாளில் இரவு 8.30 மணிமுதல் 9.00 மணி வாக்கில் நாங்கள் வீட்டிலிருந்த போது எங்கள் வீட்டின் கூரை தீ பிடித்து எரிந்தது. தீ பிடித்த வீட்டிலிருந்து ஆடுகள் கதறியது. அந்த தீயில் ஒரு ஆடு எரிந்துவிட்டது. கூரை கொட்டகை எரிந்துவிட்டது. தீயில் கருகிய நிலையில் எரிந்த சுமார் 60 மற்றும் 65 செ.மீ. நீளமுள்ள இரண்டு கரிக்கட்டைகள் சா.பொ.1. மற்றும் சம்பவ இடத்தில் எடுக்கப்பட்ட சாம்பல் சிறிதளவு சா.பொ.2 சின்னத்தம்பி என்பவர் ஆஜர் எதிரி கோவிந்தனை துரத்தினார். மூன்று கோழிகள் நெருப்பில் கருகிவிட்டதா அல்லது பறந்துபோய்விட்டதா என்று தெரியவில்லை. இது சம்பந்தமாக நான் புகார் கொடுத்தேன். அந்த புகார் அ.சா.ஆ.1. அந்த புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். காவல் துணைக் கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-

ஆஜர் எதிரி பட்டியல் வகுப்பை சேர்ந்த பெண்ணைத் தான் திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான். ஆஜர் எதிரி கூலி வேலை தான் செய்து வருகிறார் என்றால் சரிதான். சம்பவத்தில் எனது கோழிகள் மட்டுமல்லமால் மற்றவர்கள் கோழிகளும் தான் செத்துப் போயின. சந்திரா வேறு சமூகத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். கோழிகள் செத்தது சம்பந்தமாக சம்பவத்திற்கு முன்பு சந்திராவும், நானும் புகார் கொடுத்தோம். அந்த புகார் விசாரணையின்போது ஆஜர் எதிரி இரு சக்கர வாகனத்தில் வந்தார். புகாரில் ஆஜர் எதிரியை தவிர மற்ற வேறு நபர்கள் மீதும் புகார் கொடுத்துள்ளோம். வீட்டின் கூரையில் தீ பிடித்து எரியும்போது நான் வீட்டிற்குள் இருந்தேன். ஆடுகள் கத்தியவுடன் வெளியே வந்த பார்த்தபோது ஆஜர் எதிரி அந்த இடத்திலிருந்து ஓடிக்கொண்டிருந்தார். சம்பவத்தில் ஒரு ஆடு இறந்துவிட்டது. இரண்டு ஆடுகள் காயமடைந்தன. அந்த ஆடுகளை பரிசோதித்த மருத்துவர் ஆடுகள் பிழைக்காது என்று சொல்லிவிட்டார். ஆஜர் எதிரி ஓடும்போது சத்தம் கேட்டு அங்கு வேறு நபர்களும் வந்துவிட்டார்கள். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல், ஆஜர் எதிரி என் சாதியின் பெயரைச் சொல்லி திட்டவில்லையென்றும், அவர் எனது வீட்டிற்கு தீ வைக்கவில்லையென்றும் முன் விரோதம் காரணமாக அவரை இந்த வழக்கில் சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. சம்பவயிடத்திலிருந்து மல்லசமுத்திரம் காவல் நிலையம் சுமார் 2 கி.மீ. தூரத்தில் உள்ளது. காலதாமதமாக புகாரைக் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.